7th March 1963]

அரசாங்க மருத்துவ மனைகளில் அறுவை நிலையங்கள்
(செங்கற்பட்டு மாவட்டம்)

*148 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரிய அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள அறுவை நிலையங்களில் (Operation Theatres) குளிர்சாதன வசதிகள் அமைக்கப் பெற்றுள் ளனவா ?

(இ) எந்தெந்த இடங்களில் ?

(உ) இதர மாவட்டங்களில் இது போன்று அமைக்கப்பட் டுள்ளனவா ?

(எ) இல்லையெனில், அவ்வாறு குளிர்சாதன வசதிகள் அமைக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(a) No.

(b) Does not arise.

(c) No.

(d) Yes.

பஞ்சாயத்து அமைத்தல் (அகரம் சிகூர்)

*149 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி (திரு. இரா. நாராயணன் சார்பாக): கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் அகரம் சிகூர் கிராமத்தைத் தனி பஞ்சாயத்தாக ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) அப்படியாயின், அது எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The question whether the existing panchayats should be bifurcated or amalgamated or retained as they are has to be considered as a general issue and a decision taken.

A decision on the question of constituting a separate panchayat for Agaramsikoor village will be considered at the appropriate time after the above general question is decided.

திரு. கரு. சீமைச்சாமி: இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களில், ஒரு பஞ்சாயத்துக்கு நாலைந்து ஊர்கள் இருக்கின்றன. அந்த ஊர்கள் ஒன்றுக்கொன்று ஏழு மைல் தொலைவிலும் இருக்கின்றன. ஆகவே, இனி வரப்போகிற பஞ் சாயத்துத் தேர்தலுக்குள்ளாக பஞ்சாயத்துக்களையெல்லாம் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

[7th March 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் இது பற்றிய கொள்கை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரு பஞ்சாயத்து இயங்கிக் கொண்டிருக்கும்போது அதை நடுவில் பிரிப்பதாக உத்தேசம் இல்லை. பொதுத் தேர்தலுக்கு முன்பு இதெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : அடுத்து வருகிற பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பாகவே பஞ்சாயத்து இல்லாத கிராமங்களுக்குப் பஞ்சாயத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. புதிதாக பஞ்சாயத்து அமைக்கப்படவேண்டுமென்றால், அது கவனிக்கப்படும்.

திரு. கி. இரா. சம்பந்தம் : சில பஞ்சாயத்துக்கள் பெரிதாக இருக்கின்றன. அங்கு அவர்களுக்குள்ளாகவே பூசல்கள் ஏற்பட்டு பஞ்சாயத்தே நடக்க முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களையெல்லாம் பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டனுப்பினால்தான் மாற்ற முடியுமா ? அல்லது பொது மக்கள் மகசர் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு, மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றியெல்லாம் கொள்கை முதலில் நிர்ணயிக்கப்படவேண்டும். அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : பஞ்சாயத்துத் தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துத் தேர்தல், நெருக்கடி நிலைமையையொட்டி மற்ற தேர்தல்களைப் போல, ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். எப்பொழுது நடைபெறுவது என்ற பிரச்னை இன்னும் எழவில்லை.

திரு. ம. கமலநாதன் : உபதேர்தல் நடைபெற தேர்தல் கமிஷன் அனுமதித்திருக்கும்போது, பஞ்சாயத்துத் தேர்தல் நடத்துவதற்கு நெருக்கடி நிலைமை காரணமாக இருக்க வேண்டுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. க. ர. முனிரத்தினம் : தனிப் பஞ்சாயத்தாக இயங்கக் கூடிய சக்தி இருந்தும், இரண்டு கிராமங்களைச் சேர்த்து ஒரே பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்தைத் தனித்தனியாய்ப் பிரித்து அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்.